www.Padasalai.Net www.TrbTnpsc.com

திருப்பூர் மாவட்டம்

10 P

Register No.

# அரையாண்டுத் தேர்வு – 2023

நேரம் : 3.00 மணி

## தமிழ்

மதிப்பெண்கள் : 100

### பகுதி – I

குறிப்பு : 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15 x 1 = 15

2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. 'சாகும் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும் – என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்' என்று கூறியவர்

அ) திரு.வி.க. ஆ) க. சச்சிதானந்தன் இ) நப்பூதனார் ஈ) தனிநாயக அடிகள்

2. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது.............

அ) புதூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

3. 'இவள் தலையில் எழுதியதோ கற்காலம் தான் எப்போதும்' – இவ்வடிகளில் கற்காலம் என்பது........

அ) தலைவிதி ஆ) பழையகாலம் இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

4. மலர்விழி பாடினாள் – இத்தொடர்...........

அ) பொதுமொழி ஆ) தனிமொழி இ) தொடர்மொழி ஈ) அடுக்குத்தொடர்

5. காலம் கரந்த பெயரெச்சம் என்பது...

அ) வினைத்தொகை ஆ) உம்மைத்தொகை இ) பண்புத்தொகை ஈ) அன்மொழித்தொகை

6. அன்பால் கட்டினார் ; அறிஞருக்குப் பொன்னாடை தொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது............

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

7. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?

அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

8. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள்..........

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

9. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' – மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே.............

அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும் இ) திருப்பதியும் திருச்செந்தூரும்

ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

10. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்.............

அ) உதியன் ; சேரலாதன் ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன் இ) பேகன் ; கிள்ளிவளவன்

ஈ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி

11. வாய்மையே மழைநீராகி – இத்தொடரில் வெளிப்படும் அணி...........

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

"நும்இல் போல நில்லாது புக்கு,
கிழவிர் போலக் கேளாது கெழீஇ



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

சேட் புலம்பு அகல இனிய கூறி
பருஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவீர்".

12. இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது?
அ) காசிக் காண்டம் ஆ) முல்லைப்பாட்டு இ) மலைபடுகடாம் ஈ) நீதிவெண்பா

13. 'இறடி' – என்பதன் பொருள்.........
அ) திணை ஆ) தினை இ) நெல் ஈ) சோறு

15. 'பொழிந்த' – இலக்கணக் குறிப்புத் தருக.
அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம் இ) தொழிற்பெயர் ஈ) உருவகம்

## பகுதி – II பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 21–வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.** **4 x 2 = 8**

16. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச்சங்கம் 'வாழை இழை விருந்து விழாவை' ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது.
ஆ) 1956 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது.

18. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.

19. வசன கவிதை – குறிப்பு வரைக.

20. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் – சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

21. 'இன்மையின்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5 x 2 = 10**

22. சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.
அ) இன்சொல் ஆ) கீரி பாம்பு

23. பழமொழிகளை நிறைவு செய்க.
அ) உப்பில்லாப் ........... ஆ) விருந்தும் ............

24. பகுபத உறுப்பிலக்கணம் தருக – "கிளர்ந்த"

25. கலைச்சொற்கள் தருக.
அ) Land breeze – ஆ) Irrigation -

26. உவமைகளைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.
அ) தாமரை இலை நீர் போல
ஆ) கண்ணினைக் காக்கும் இமை போல

27. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க?
அ) கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.
ஆ) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

28. சிறு பொழுதுகள் எத்தனை? அவை யாவை?

## பகுதி – III பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

29. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' – இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர்புரிய வேண்டும் என்று ஒரு புறப்பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

அ) ஆவூர் மூலங்கிழாரின் போர் அறம் யாது?

ஆ) போர் அறம் என்பது எதனைக் குறிக்கிறது?

இ) யாருக்கெல்லாம் தீங்கு வராதவண்ணம் போர் புரிய வேண்டும்?

31. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

## பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 34–வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.** 2 x 3 = 6

32. முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?

33. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) "வாளால் அறுத்து" – எனத் தொடங்கும் பெருமாள் திருமொழி பாடல். **(அல்லது)**

ஆ) "நவமணி" – எனத் தொடங்கும் தேம்பாவணி பாடல்.

## பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2 x 3 = 6

35. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும்வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.

– இப்பத்தியில் உள்ள தொகாநிலைத் தொடர்களின் வகைகளை எழுதுக.

36. தன்மையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5 x 5 = 25

38. அ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

**(அல்லது)**

ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

39. அ) உங்கள் பள்ளியில் நடைபெறும் விடுதலைநாள் விழாவிற்கு, நிகழ்கலை வல்லுநர் ஒருவரை சிறப்பு விருந்தினராகப் பள்ளிக்கு அழைத்துக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் "உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்" என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், தணிகை நகர், வள்ளுவர் தெருவில் 44 ஆம் இலக்க வீட்டில் வசித்துவரும் அமுதன் என்பாரது மகள் கயல்விழி 736655 என்ற பதிவு எண்ணுடன் 2023 ஆம் ஆண்டு பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளாா். அவர் மேல்நிலை வகுப்பில் கணிதம் – உயிரியல் பாடப்பிரிவில் தமிழ் வழியில் சேர விரும்புகிறார். தேர்வர் தம்மை கயல்விழியாகப் பாவித்து படிவத்தை நிரப்புக.

42. அ) நிகழ்கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேன்மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்யவிருப்பனவற்றை வரிசைப்படுத்தி எழுதுக.

**(அல்லது)**

ஆ) மொழிபெயர்க்கவும். Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutham region was fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

## பகுதி – V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** 3 x 8 = 24

43. அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) நிகழ்கலை வடிவங்கள் – அவை நிகழும் இடங்கள் – அவற்றின் ஒப்பனைகள் – சிறப்பும் பழமையும் – அருகிவரக் காரணங்கள் – அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன – இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.

44. அ) 'புயலிலே ஒரு தோணி' கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத்தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

**(அல்லது)**

ஆ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45. அ) 'விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்' என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக.

**(அல்லது)**

ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக. (முன்னுரை – பொருட்காட்சி அமைவிடம் – பல்வித அரங்குகள் – நடைபெற்ற நிகழ்ச்சிகள் – அடைந்த உணர்வுகளும் நன்மைகளும் – முடிவுரை)



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com